06.03.2026

O.S.No.205/2024

DW1- திருமலைக்குமார்– த/பெ. முத்தையா

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 06.03.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. நான் யாருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் என் தாயாருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

2. என் தாயாருக்கு உடல்நிலை சரியில்லை என்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததால் என் தாயாருக்காக நான் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரியல்ல.

3. என் தகப்பனார் பெயர் என்ன என்றால் முத்தையா.

4. தாவா சொத்தின் மேற்கே உள்ள இடம் முதலில் பழனி மூப்பனார் பெயரில் இருந்தது தற்போது சுடலைமுத்து பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

5. தாவா சொத்தில் 2 வீடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் கதவு எண் என்ன என்றால் 10/240 மற்றும் 10/240 ஏ.

6. தாவா சொத்திற்கும் 1ம் பிரதிவாதி இடத்திற்கும் இடையே உள்ள முடுக்கில் தான் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான்.

7. வாதி தாக்கல் செய்த பிராதை படித்து பார்த்தேன் என்றால் சரிதான்.

8. பிராதின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான்.

9. தபசில் சொத்திற்கு கீழ்புறம் உள்ள முடுக்கு 2ம் தபசில் சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. தபசில் சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிடும் போது நான் உடனிருந்தேனா என்றால் சரிதான்.

11. தபசில் சொத்திற்கு வடக்கே மற்றும் தெற்கே தெரு உள்ளது என்றால் சரிதான்.

12. வாதி சொத்தின் கிழமேல் அளவு என்றால் எனக்கு தெரியாது.

13. முடுக்கின் கிழமேல் அளவு என்ன என்றால் வடதலையில் 4.2 அடியும், தென்தலையில் 3.6 அடியும் உள்ளது.

14. முடுக்கின் வடபகுதியில் நான் வாசல் வைத்து எவ்வளவு நாட்கள் ஆகிறது என்றால் 40 வருடம் ஆகிறது. அதன் விவரம் எனக்கு நேரடியாகத் தெரியுமா என்றால் தெரியும்.

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க 09.03.2026 அன்று குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
தென்காசி